

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (23.5.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 3வது தளத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து, பார்வையிட்டு அலுவலர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசின் தலைமை காஜி

# சலாவுதீன் முகமது அயூப் சாகிபு மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மே 25–**
**தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:**

தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

கற்றறிந்த பேராசிரியரான அவர், தனது சமூகச் சேவைகளுக்காக என்றென்றும் நினைவு கூரப்படுவார். தன்னுடைய பண்பால் இஸ்லாமிய சமூகத்தினரின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றிருந்த அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

நான் ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலந்தொட்டு, என் மீது பேரன்பு செலுத்தியவர் அவர். மூப்பெய்திய போதும், நான் பங்கெடுக்கும் இப்தார் நிகழ்வுகள் அனைத்திலும் தன்னுடைய உடல்நலன் ஒத்துழைக்கும் வரையில் பங்கேற்பேன் என்று சொல்லிய அவரை இன்று இழந்து வாடுகிறோம்.

அவரது பிரிவால் வாடும் இஸ்லாமிய மக்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதி

# வட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

திருவொற்றியூர், மே 25-
திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அவர்களின் ஏற்பாட்டில் இன்று (25.5.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், கே.பிரபாவதி, பகுதி பொருளாளர் ஆர்.குமரேசன் ஆகியோரின் முன்னிலையில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் வட்டச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 28.5.2025 புதன்கிழமை காலை 9 மணிக்கு திருவொற்றியூர் தொகுதிக்கு சூரை மீன் பிடி துறைமுகம் திறந்து வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது குறித்து.

27.5.2025 - மண்டல பொறுப்பாளர் கழக துணை செயலாளர் ஆ.ராசா அவர்களுடன்

திருவொற்றியூர் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் குறித்தும்.

ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சி குறித்தும்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# திருவொற்றியூர் குப்பத்தில் முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் – பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தனர்!

சென்னை, மே 25 -
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 28.5.2025 அன்று திருவொற்றியூர் குப்பத்திற்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருவதை முன்னிட்டு, அமைச்சர் பெருமக்கள் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 28.5.2025 அன்று சென்னை, திருவொற்றியூர் குப்பத்தில் ரூ.275 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சூரை மீன்பிடி துறைமுகம் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுவதை முன்னிட்டு, நேற்று (24.5.2025) திருவெற்றியூர் துறைமுகத்தை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், சட்டமன்ற உறுப்பினர்கள் (மாதவரம்) எஸ். சுதர்சனம், (திருவொற்றியூர்) கே.பி.சங்கர், மீன்வளத் துறை ஆணையர் திருமதி. இரா.கஜலட்சுமி, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை! பி.டி.பாண்டிச்செல்வம் பங்கேற்பு!

# 92வது வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் அறிக்கை!

சென்னை, மே.25-
92வது வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம் நடைபெற உள்ளதால் இதுகுறித்து வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் அறிக்கை வருமாறு :-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92வது வட்ட கழக பாக முகவர்கள் உறுப்பினர்கள் கூட்டம் இன்று (25.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் முகப்பேர் மேற்கில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில் சுரேஷ், மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன்,

மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு ஆகியோர் வரவேற்புரை ஆற்ற, நிகழ்ச்சிக்கு சிறப்புரை ஆற்றி தலைமை கழக தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம், கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாமன்ற எதிர் கட்சி துணை தலைவர் கே.நிலகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள், வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பாக தலைவர்கள், அதன் பாக உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் முகப்பேர் எம்.எம். ஜெயரத்தினம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 121 வது வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் டி.ராஜவேலு அறிவிப்பு!

சென்னை, மே 25-
சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 வது வட்டக்கழகத்தின் சார்பில் இன்று (25/5/2025)காலை 10:00 மணி அளவில் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம்,பிருந்தாவனம் ரோடு, மயிலாப்பூரில் 121 வது வட்ட கழக செயலாளர் டி.ராஜவேலு தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் மயிலை மேற்கு பகுதி கழக செயலாளரும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி, மயிலாப்பூர் தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் கலந்து கொண்டு நிர்வாகிகள் மற்றும் பாகபொறுப்பாளர்கள், பாகஉறுப்பினர்கள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற உள்ளதால் அனைத்து கழக நிர்வாகிகள் பாக (BLA 2) பொறுப்பாளர்கள் பாக உறுப்பினர்கள் (BLC) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 121வது வட்டச் செயலாளர் டி.ராஜவேலு தெரிவித்துள்ளார்.

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. - பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

# மதுரவாயல் 153 வது வட்டப் பாக முகவர்கள் - பாக நிலை உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் அறிக்கை!

சென்னை, மே. 25-
சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டப் பாக முகவர்கள் (BLA -2) மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் ஏற்பாட்டில் இன்று (25.05-.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 5:00 மணிக்கு, போரூர் சக்தி நகரில் அமைந்துள்ள ராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக அவைத் தலைவர் க. நடராஜன் தலைமையில், மாமன்ற உறுப்பினர் சாந்தி இராமலிங்கம், பி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, மதுரவாயல் தேர்தல் பார்வையாளர் பி.டி.பாண்டிச் செல்வம், தலைமை கழக செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டு பாக முகவர்கள் மற்றும் பாக நிலை உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டப் பாக பொறுப்பாளர்கள் சூரியபிரகாஷ், தினேஷ், ஆர்.ஆர்.சரவணன் ஆகியோர் பங்கேற்க இருக்கின்றனர்.

ஆகவே இக்கூட்டத்திற்கு வட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BL A -2) பாக நிலை உறுப்பினர்கள் (BLC) அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் பாடியநல்லூர் ஊராட்சி, எம்.ஏ.நகரில் புதிய நியாய விலைக் கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திறந்து வைத்து இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கி.வீரம்மாள், பொன்.கோதண்டன், பா.சேகர், நா.பரசுராமன், இரத்தினமாலா, துளசி, சிவகாமி, என்.முகமது அலி, எஸ்.கே.மணி. மயிலை சந்திரசேகரன், ப.சு.க.இளங்கோவன். இளைஞரணி அமைப்பாளர் ஜெகன், துணை அமைப்பாளர் விஜி, சிவசங்கரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு அரசின் நான்காண்டுகள் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி பஜார் வீதியில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் ஆகியோர் வணிகர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி தொடங்கி வைத்தனர். ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பல்வேறு கிராமங்களில் துண்டுப் பிரசுரங்களை வழங்கி வருகின்றனர்.

## 110 ‘அ’ வட்டக் கழக முன்னோடி

# பி.முத்துகிருஷ்ணன் மனைவி மோகனா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மே 25-
சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி மாவட்ட கழக பிரதிநிதி வி.என். பாபு அவர்களின் மாமியாரும், 110வது ‘அ’ வட்டக் கழக மூத்த முன்னோடி பி.முத்து கிருஷ்ணன் அவர்களின் துணைவியாருமான எம்.மோகனா அவர்கள் நேற்று (24.5.2025 - சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (25.5.2025 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை-34, நுங்கம்பாக்கம், புஷ்ப நகர், நெ. 3/18 அவருடைய இல்லத்திலிருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டு நுங்கம்பக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

# டெல்லியில் கொரோனா பரவல் அதிகரிப்பு !

புதுடெல்லி, மே 25-
டெல்லியில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் சிறப்பு வார்டுகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறு அனைத்து மருத்துவமனைகளுக்கும் அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து டெல்லி சுகாதார அமைச்சர் பங்கஜ் சிங் வெளியிட்டுள்ள அறிப்பில், டெல்லியில் புதிதாக 23 பேருக்கு கொரோனா தொற்று பதிவாகியுள்ளதாகவும், நோயாளிகளின் வெளிநாடு அல்லது வெளிமாநில பயணங்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், டெல்லியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், கொரோனா சிறப்பு வார்டுகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், போதுமான படுக்கைகள், ஆக்சிஜன், தடுப்பூசிகள், மருந்துகளை தேவையான அளவு இருப்பு உள்ளதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. நாடு முழுவதும் வீரியம் குறைந்த கொரோனா தொற்று தற்போது பரவத் தொடங்கியுள்ள நிலையில், இந்த அறிவிப்பை டெல்லி அரசு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளை திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி நேரில் சென்று பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன், 71வது வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ்பாபு, 73வது வட்ட செயலாளர் எம்.தமீம், அவைத்தலைவர் தில்லை.கதிரவன், பகுதி கழக துணை செயலாளர் புல்லட் ரமேஷ், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் துணை அமைப்பாளர் சிவகுமார், திரு.வி.க.நகர் தொகுதி கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் எஸ். கௌதம், 73வது வட்ட துணை செயலாளர் சுரேன், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பிரகாசம், ஸ்வீட்பாபு, சிக்கன் ராமு, சுரேஷ்பாபு, தவமணி மற்றும் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் பேரூர் கழக செயலாளர் மு.தேவராஜ் தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் பேரூர் கழக பாக முகவர்கள் கூட்டம் பாகம் 130 முதல்133 வரை நடைபெற்றது. இந்த நிகழ்சியில் தொகுதி பார்வையாளர் எஸ்.எம். கே.அண்ணாதுரை, எஸ்.அஸ்கர் அலி, ஆர்.பரசுராமன், டி.செங்குட்டுவன், பி.சுரேஷ், பி.குணசேகரன், எஸ்.பாஸ்கர், ஜி.நாகூரான், ஜி.சிபிசக்கரவத்தி, எஸ்.ஏழுமலை, என்.மேகலாதேவி, எஸ்.அனு சிபிசக்கரவர்த்தி, கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.